ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## ஸ்ரீகண்ணன், பெரியவச்சான் பிள்ளை மற்றும் நாயனாராச்சான்பிள்ளை – வருஷத்திருநக்ஷத்திரம் - ஆவணி - ரோகிணி

### ஸ்ரீகண்ணன்



ஸ்ரீ கிருஷ்ணர், திருவல்லிக்கேணி

### தனியன்

ஸிம்ஹமாஸேSஸிதே பசேஷ ரோஹிண்யாமஷ்டமீதிதௌ /
சரமார்த்த ப்ரதாதாரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் //

ததோSகிலஜகத்பத்ம போதாயாச்யுதபாநுநா /
தேவகீ பூர்வஸந்த்யாயா மாவிர்ப்பூதம் மஹாத்மநா //

ஸ்ரீஜெயந்தி என்று கூறினாலே ஸ்ரீகிருஷ்ணரின் திருஅவதரித்த நாளையே கூறிக்கும். மற்ற எம்பெருமான்களின் திருஅவதரித்த நாளை கூறிப்பிடும்போது, அந்தந்த எம்பெருமான்களின் திருநாமத்தோடு ஜெயந்தி என்றகிற சொல்லையும் சேர்த்துச் சொல்லவேண்டும். (ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, ஸ்ரீவராஹ ஜெயந்தி முதலியன). இது ஒரு ஸ்ரீகிருஷ்ணரின் தனி அவதார விசேஷமாகும்.

கண்ணனை ஆழ்வார்கள் பல பாசுரங்களில் அனுபவித்துள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை கீழே காண்போம்.

<u>பொய்கையாழ்வார் - முதல்திருவந்தாதி - 24ஆம் பாசுரம்</u>

விரலோடு வாய்தோய்ந்த வெண்ணைய் கண்டு. ஆய்ச்சி
உரலோடு உறப்பினித்த நான்று - குரலோவாது
ஏங்கி நினைந்து அயலார் காண இருந்திலையே ?
ஓங்கோத வண்ணா ! உரை.

<u>பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 64ஆம் பாசுரம்</u>

கதையின் (கதையும்) பெரும்பொருளும் கண்ணா !. நின்பேரே
இதயமிருந்தவையேயேத்தில். - கதையும்
திருமொழியாய் நின்றதிருமாலே!. உன்னைப்
பருமொழியால் காணப்பணி.

<u>பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி - 42ஆம் பாசுரம்</u>

கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதி
மாவலனாய்க்கீண்ட மணிவண்ணம் - மேவி
அரியுருவாகி இரணியனதாகம்
தெரியுகிறால் கீண்டான் சினம்.

<u>திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி - 50ஆம் பாசுரம்</u>
(கபிஸ்தல திவ்யதேசத்தின் மங்களாஸாசனப் பாசுரம்)

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா. தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன். ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல் கிடக்கும். மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்து எனக்கு.

<u>நம்மாழ்வார் - 6ஆம் பத்து - 7ஆம் திருவாய்மொழி - 1ஆம் பாசுரம்</u>

உண்ணும் சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன். எம்பெருமானென்றென்றே கண்கள் நீர்(கள்) மல்கி.
மண்ணினுள் அவன் சீர் வளம் மிக்கவனூர் வினவி
திண்ணம் என் இளமான்புகுமூர் திருக்கோளுரே.

<u>குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி - 6ம் திருமொழி - 9ஆம் பாசுரம்</u>

மஞ்கல நல்வனமாலை மார்விலிலங்க மயில் தழைப்பீலி சூடி.
பொங்கிளவாடை அரையில் சாத்திப் பூங்கொதுக்காதில் புணரப்பெய்து.
கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழலினிதூதிவந்தாய்.
எங்களுக்கே ஒருநாள் வந்தூத உன்குழலின்னிசைபோதராதே.

## பெரியாழ்வார் - 3ஆம்பத்து 1ஆம் திருமொழி 1ஆம் பாசுரம்

தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருவான்.
பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு ஒருபுள்ளுவன் பொய்யே தவழும்.
மின்னேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கைதுஞ்ச வாய்வைத்தபிரானே !
அன்னே! உன்னைஅறிந்து கொண்டேன் உனக்கு அஞ்சுவன் அம்மம்தரவே.

## ஸ்ரீஆண்டாள் - திருப்பாவை - 25ஆம் பாசுரம்

ஒருத்தி மகனாய் பிறந்து. ஓரிரவில்
ஒருத்திமகனாய் ஒளித்துவளர.
தரிக்கிலலனாகித் தான்தீங்குநினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்.
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்துவந்தோம் பறை தருதியாகில்.
திருத்தக்கசெல்வமும் சேவகமும்யாம்பாடி.
வருத்தமும் தீர்ந்து மகிழ்தேலோரெம்பவாய்.

## தொண்டரடிப்பொடியாழ்வார் - திருமாலை - 45ஆம் பாசுரம்

வளவெழும் தவள மாட மதுரைமா நகரம் தன்னுள்.
கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்க மாலை.
துளவத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி சொல்.
இளையபுன்கவிதையேலும் எம்பிராற்கு இனியவாறே.

## திருப்பாணாழ்வார் - அமலனாதிபிரான் - 10ஆம் பாசுரம்

கொண்டல் வண்ணனைக். கோவலனாய் வெண்ணைய்
உண்டவாயன். என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி அரங்கன். என் அமுதினைக்
கண்டகண்கள். மற்றொன்றினைக் காணவே.

## திருமங்கையாழ்வார்-பெரியதிருமொழி-4ஆம் பத்து–8ஆம் திருமொழி–1ஆம் பாசுரம்

கவளையானைக் கொம்பொசித்த கண்ணனென்றும். காமருசீர்க்
குவளைமேக மன்னமேனி கொண்டகோன் என்னானை யென்றும்.
தவளமாட நீடுநாங்கைத் தாமரையாள் கேள்வனென்றும்.
பவளவாயாள் என் மடந்தை பார்தன்பள்ளி பாடுவாலே.

## மதுரகவியாழ்வார் - கண்ணிநுண்சிறுத்தாம்பு - முதல் பாசுரம்

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் - என்னப்பனில்.
நண்ணித் தென்குருகூர் நம்பியென்னக்கால்.
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே.

திருவரங்கத்தமுதனார் - இராமாநுஜநூற்றந்தாதி - 68ஆம் பாசுரம்

ஆரெனக்கின்று நிகர்ச்சொல்லில்?. மாயன் அன்றுஐவர்தெய்வத்
தேரினிற் செப்பிய கீதையின். செம்மைப் பொருள்தெரியப்
பாரினிற் சொன்ன விராமானுசனைப் பணியும் நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது. என்னாவியும் சிந்தையுமே.

மணவாளமாமுனிகள் - திருவாய்மொழி நூற்றந்தாதி - 57ஆம் பாசுரம்

உண்ணுஞ்சோறாதி யொருமூன்றும் எம்பெருமான்.
கண்ணன் என்றே நீர்மல்கிக் கண்ணிணைகள் - மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால் போம்மாறன்.
பொன்னடியே நந்தமக்குப் பொன்.

பெரியவாச்சான்பிள்ளை



பெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீரங்கம்

## தனியன்

ஸகலத்ராவிடாம் நாய ஸாரவ்யாக்யாநகாரிணம் ।
ஶ்ராவணே ரோஹிணீ ஜாதம் ஸ்ரீகிருஷ்ண குருமாஶ்ரயே ॥
ஸ்ரீமத்க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா ॥

திருவவதாரஸ்தலம் - சங்கநல்லூர் (திருவெள்ளியங்குடி அருகில்)
திருத்தகப்பனார் - யாமுனதேஸிகர்; திருத்தாயார் - நாச்சியாரம்மன்
திருநாமங்கள் - பெரியவாச்சான்பிள்ளை, அபயப்ரதாராஜர், ஸ்ரீமத்க்ருஷ்ணர்
ஆசார்யர் - நம்பிள்ளை; குலம் - பூர்வசிகை; சிஷ்யர்கள் -
நாயனாராச்சான்பிள்ளை(தத்தபுத்ரர்), பரகாலதாஸர், பின்பழகிய பெருமாள் ஜீயர்,
ஸ்ரீரங்காசார்யர், வாதிகேஸரி அழகிய மணவாளப்பெருமாள் ஜீயர்
இவர் அருளியுள்ள க்ரந்தங்கள் - திருவாய்மொழி வ்யாக்யானம் இருபத்து நாலாயிரம், மற்ற ப்ரபந்தங்களுக்கு வ்யாக்யானங்கள், பரந்த ரஹஸ்ய விவரணம், மாணிக்கமாலை, நவரத்னமாலை, ஸகலப்ரமாணதாத்பர்யம், உபகாரரத்னம், கத்யத்ரய வ்யாக்யானம், ஆளவந்தார் ஸ்தோத்ர வ்யாக்யானம், அபயப்ரதான வ்யாக்யானம், சரமரஹஸ்யம், அநுஸந்தான ரஹஸ்யம், நிகமனப்படி, பாசுரப்படி இராமாயணம். இவற்றுள் பல கிரந்தங்கள் இப்பொழுது நமக்கு கிடைக்கவில்லை.

## இவருடைய அவதாரப்பெருமை

பெரியதிருமொழி 7ஆம் பத்து 10ஆம் திருமொழி 10ஆம் பாசுரம் திருக்கண்ணமங்கை பாசுரத்தில் `கண்ண! நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே' என்கிற பாசுரத்தின்படி, திருமங்கையாழ்வார் நம்பிள்ளையாகவும், கண்ணன் பெரியவாச்சான் பிள்ளையாகவும் அவரவர்கள் திருநட்சத்திரத்தில் அவதரித்தாக பெரியோர்கள் நிர்வாகிப்பர்.

## இவரை போற்றியுரைக்கும் உபதேசரத்தினமாலை – 39, 43 & 46ஆம் பாசுரங்கள்

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப் - பிள்ளை
மணவாளயோகி திருவாய்மொழியைக் காத்த
குணவாளர் என்று நெஞ்சே! கூறு.

நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிட*
பின்பெரியவாச்சான்பிள்ளை யதனால் * - இன்பா
வருபத்தி மாறன்மறைப் பொருளைச்சொன்னது*
இருபத்துநாலாயிரம்.

பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும் தெரிய *
வியாக்கியைகள் செய்வால் * - அரிய
அருளிச்செயற்பொருளை யாரியர்கட்கிப்போது *
அருளிச் செயலாயத் தறிந்து.

## 39ஆம் பாசுரத்தின் விளக்கம் *

திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிறான் பிள்ளான், நஞ்ஜீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத்திருவீதி பிள்ளை, வாதிகேசரி ஜீயர் என்கிற ஐந்து ஆசார்யர்கள் வ்யாக்னங்கள் அருளி உள்ளனர். இந்த ஐய்வரும் `திருவாய்வாய்மொழியை காத்த குணவாளர்' என்று இங்கு கூறினது பொருந்தும். வியாக்கியானம் இயற்றுவதும் ஒருவகையான ஸம்ரசஷணம் ஆதலால், `காத்த' என்று கூறியது ஒன்றும் குறையில்லை.

## 43ஆம் பாசுரத்தின் விளக்கம் *

ஆசார்யர்கள் வியாக்கியான நூல்களை எழுதி யருள்வதற்குப் பல காரணங்களுண்டு. பின்புள்ளாருடைய உஜ்ஜீவநார்த்தமாகச் சிலர் எழுதுவர்கள். ஸ்வாசார்யர் உபந்யஸித்தருளும் அர்த்தவிசேஷங்கள் பெருக்குமாறு போலன்றிக்கே `அதிலே தேங்கின மடுக்கள்போலே விளங்கவேணுமென்று' சிலர் எழுதுவர்கள். ஸ்வாசார்யர் ஏடுபடுத்தும்படி நியமித்தருள அதனாலே சிலர் எழுதுவர்கள். தம் புலமையைக் காட்டிவைப்போமென்று கருதிச் சிலர் எழுதுவர்கள். இங்ஙனேயுள்ள பல வகைகளில் பெரிவாச்சான்பிள்ளை வியாக்கியான மிட்டருளினது ஸ்வாசார்யரான நம்பிள்ளையின் பரமக்ருபாப்ரயுக்தமான நியமனத்தினால் என்பது இப்பாசுரத்தினால் தெரிவிக்கப்பட்டது.

## 46ஆம் பாசுரத்தின் விளக்கம் *

பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் வியாக்கியானம் இட்டருளினவர் ஆதலால் அவருடைய மஹோா உபகாரத்தை இப்பாட்டில் வியந்து கூறுகிறார். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் வியாக்கியானம் அருளிச் செய்யாதிருந்தால், திவ்யப்ரபந்த திவ்யார்த்தங்களைப் பின்புள்ளார் அறிந்து ப்ரவசனம் செய்யவே முடியாது. இந்த பேராசாரியர் பரமக்ருபை செய்தருளினதால் தான் பின்புள்ளார்கள் ஆசார்ய பீடத்திலமர்ந்து திவ்யப்ரபந்தப்பொருள்களை ப்ரவசனம் செய்ய சௌகரியமாயிற்று. பெரியவாச்சான் பிள்ளை அருளிய பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரும்பாலும் லுப்தமாய்ப் போனாலும் எஞ்சிய திவ்யப்ரபந்தளுக்கு இவருடைய வியாக்கியானமே சரணமாயிருப்பது கொண்டு, இங்ஙனம் அருளிச் செய்தார்.

***காஞ்சி P.B.A. ஸ்வாமி அருளியுள்ள உபதேச ரத்தினமாலை வ்யாக்கியானத் திலிருந்து எடுக்கப்பட்டது.**

## இவருடைய பெருமைகள்

இவருடைய சிஷ்யர் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் அருளிய `தத்வ நிரூபணம்' என்கிற க்ரந்தத்தின் தொடக்கத்தில்,
அபயப்ரத நாமாநம் அஸ்மத் குரும் அஹம் பஜே /
யத்கடாசஷத் அயம் ஜந்து: அபுநர்ஜன்மதாம் கத: //

என்று அருளிச் செய்துள்ளார்.

இவருடைய அருளால் வரதன் என்கிற சிஷ்யர் ஒன்றும் அறியாத நிலையிலிருந்து உயர்வு பெற்று முசலகிசலயம் என்ற நூலை முதலில் எழுதி, பின்னர் திருவாய்மொழிக்கு பன்னீராயிரப்படி வ்யாக்யானத்தை அருளிச்செய்து வாதிகேசரி ஜீயரானார். பெரியவாச்சான் பிள்ளையின் அருளிச்செயல் வ்யாக்யானங்களை கேட்டு மகிழ்ந்த நம்பெருமாள், `அபயப்ரதராஜா' என்று சிறப்பு பெயர் சூட்டினார். பாசுரப்படி இராமாயணம் இவர் இயற்றிய நூல்களில் ப்ரஸத்தி பெற்றது. இதனால் `இராமாயணப்பெருக்கர்' என்றும் ப்ரஸித்தி பெற்றார். இவர் அருளிய `ரஹஸ்யத்ரய ஸஞ்கரஹம்' என்ற நூல் மிகவும் அற்புதமானது.

இவர் பல வியாக்கியானங்களை எழுதியதால் `வியாக்யான சக்ரவர்த்தி' என்று பெயர் பெற்றார். இவருடைய இருபத்துநாலாயிரப்படி வ்யாக்கத்தின் பெருமையை உலகோர் அறிய வேண்டும் என்பதற்காக, தன்னுடைய செப்பு நெறியாகிய வடக்குத்திருவீதிப்பள்ளை அருளிய முப்பத்து ஆறாயிரப்படி வியாக்கானத்தை தற்போதைக்கு வெளியிக்கூடாது என்று நிறித்தி வைத்தார் நம்பிள்ளை. ஒரான் வழியாக வந்த இந்த முப்பத்து ஆறாயிரப்படி வியாக்கியானத்தை, மாமுனிகள் எல்லோரும் அறியும்படி நம்பெருமாள் முன்பே வெளியிட்டார்.

ஸ்ரீ பிள்ளைலோகார்ய ஜீயர் அருளிய யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் பெரியவாச்சான் பிள்ளையின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பங்களை குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சிலவற்றை கீழே அனுபவிப்போம்.

ஆச்சான் பிள்ளை கோஷ்டியிலே சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தையருளிச்செய்ய வேணும் என்ன, அவரும் கலங்குகிறவனும், கலக்குகிறதும், கலங்கிக்கிடக்கிறவர்களும், தெளிவிக்கிறவனும், தெளிகிறவனும், தெளிந்திருப்பவனுமாயிறே இருப்பது. இதில்

கலங்குகிறவன் - ஜீவாத்மா.
கலக்குகிறது - அசித்து.
கலங்கிக்கிடக்கிறவர்கள் - ஸம்ஸாரிகள்.
தெளிவிக்கிறான் - ஆசாரியன்.
தெளிகிறான் - சேதனன்.
தெளிந்திருக்கிறான் - ஈச்வரன்.

ஆகையாலே `ஆசார்யோபதேசேந தெளிந்தவன், கலங்குகிற தன்னையும், கலக்குகிற ப்ரக்ருதியையும், கலங்கிக்கிடக்கிற ஸம்ஸாரிகளையும் தஞ்சமன்றென்று கைவிட்டு, தெளிவிக்கிற ஆசார்யனையும், தெளிந்திருக்கும் ஈஸ்வரனையும் பற்றுகை காண் இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபம்' என்றருளிச் செய்தார்.

ஒருநாள் பிள்ளையுடைய ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்திருந்த வாதிகேஸரி ஜீயர் (க்ரஹஸ்தராய் இருந்தபோது) சாஸ்த்ர பரிசீலனை பண்ணுகிறவர்களைக்கண்டு படிக்கிறதென்? என்று கேட்க அவர்களும் `இவர்க்கு அசஷராப்யாஸமில்லை' என்றறிந்து `முஸலகிஸலயம் படிக்கிறோம்' என்று பரிஹஸித்தொரு வார்த்தை சொல்ல, இவரும் அத்தையறியாதே `இப்படியொன்றுண்டோ' என்று திகைத்து அத்தை ஸ்வாசார்யரான பெரிவாச்சான் பிள்ளைக்கு விண்ணப்பம் செய்தார்.

அவரும் மந்தஸ்மிதம் செய்து, `அவர்கள் உமக்கு அசஷராப்யாஸமில்லாமையாலே, கழுக்காணி துளிர்க்குமோ? உமக்கித்தைக்கொண்டு காரியமென்? என்று பரிஹஸத்துவிட்டார்களே' என்றருளிச்செய்ய, இவருமத்தைக் கேட்டு லஜ்ஜாவிஷ்டராய் சலம் பிறந்து திருவடிகளிலே விழுந்து `அடியேனை வித்வானாகும்படி கடாசஷித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, அபயப்ரதராஜர் உசந்து முப்பத்திரண்டு திருநசஷரத்திலே அசஷரசிசைஷகளும் பண்ணுவித்து காவ்யநாட காலங்கார சப்ததர்க்கபூர்வோத்தரமீமாம்ஸாதி ஸகலஸாஸ்த்ர வித்தமராம்படி சிசஷித்தருள, இவரும் அவர்கடாசஷத்தாலே வித்வஜ்ஜநாக்ரகண்யராய் `முஸலகிஸலயம்' என்று ஒருகாவ்ய மிட்டு அவர்கள் கையிலே கொடுத்து வாய்மூடித்தலையிறக்கிட்டு லஜ்ஜாவிஷ்டராம்படி பண்ணியருளி, மஹாவிரக்தாய் ஆஸ்ரமஸ் வீகாரம் செய்து, பரவாதிகளை ஜெயித்து மிகவும் சாஸ்த்ரநிபுணராயிருக்கையாலே வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் என்று ப்ரஸித்தரான இவர், பூர்வர்கள் செய்தருளிய திருவாய்மொழி வ்யாக்யானங்களை யெல்லாம் திருக்கண்சாத்தி அவைகளிலே ஸாரதமமான அர்த்தவிசேஷங்களை ஸங்க்ரஹித்து ஸர்வர்க்கும் ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமான ஸ்ரீபாகவதப்ரக்ரியையயாலே பன்னீராயிரம் உரை செய்தருளினார். பின்னர் தீபப்ரகாசம், தத்வநிரூபணம் முதலான அனேக ரஹஸ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்து உபகரித்தருளினார்.

## வாழித்திருநாமம்

தண்(ன்)மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்க வந்தோன் வாழியே *
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே *
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே *
பூதூர் எதிராசர் தாள் புகழுமவன் வாழியே *
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே *
மறை நாலின் பொருள் தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே *
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே *
அபயப்ரதராசர் தாள் அனவரதம் வாழியே.

தீதறு நம்பிள்ளை பதம் சென்னிவைப்போன் வாழியே *
திருமலையில் மால்பதத்தைச் சிறந்து பெற்றான் வாழியே *
ஆதரவாய்த் தனிச்லோகி அருளினான் வாழியே *
ஆழ்வார்கள் சொற்பொருளை அறிந்துரைப்போன் வாழியே *
ஓதுபுகழ்ச் சங்கநல்லூர் உகந்து பெற்றான் வாழியே *
உரோகிணி நாள் ஆவணியில் உதித்தபிரான் வாழியே *
ஏதமிலெண் மூவாயிரம் இயம்புமவன் வாழியே *
எழில் பெரியவாச்சான்பிள்ளை இணையடிகள் வாழியே *

## நாயனாராச்சான்பிள்ளை (பெரியவாச்சான்பிள்ளை தத்தபுத்ரர்)

தனியன்

ஸ்ருத்யர்த்தஸாரஜநகம் ஸ்ம்ருதிபாலமத்ரம்
பத்மோல்லஸத்பகவதங்க்ரிபுராணபந்தும் /
ஜ்ஞாநாதிராஜமபயப்ரதராஜபுத்ரம்
அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி //

(வேதங்களின் ஸாரார்த்தங்களை ப்ரதிபாதிப்பவராய் ஸ்ம்ருதிகளுக்கு பாலமித்ரராய் தாமரை போல் ப்ரகாசிக்கும் பகவச் சரணங்களுக்குப் புராதநபந்துவாய், ஜ்ஞானஞஸாம்ராஜ்யத்தின் அரசராய் அபயப்ரதராஜரான பெரியவாச்சான்பிள்ளையின் குமாரராய்ப் பரமகாருணிகராய் அஸ்மதாசார்யரான நாயனாராச்சான் பிள்ளையை வணங்குகிறேன்) (இவருக்கு சரியான திருநச்சத்திரத் தனியன் கிடைக்கவில்லை)

திருவவதாரஸ்தலம் - சங்கநல்லூர்
ஆசார்யர் - பெரியவாச்சான்பிள்ளை
குலம் - பூர்வஸிகை

இவர் செய்தருளின கிரந்தங்கள் - ஜ்ஞாநார்ணவம், தத்வத்ரய விவரணம், அணுத்வ புருஷகாரத்வ ஸமர்த்தநம், முக்த போகாவளி, சரமோபாய நிர்ணயம்.

இவர் `ஸகலவித்யாபாரங்கதர்' என்கிற விருது பெற்றவர். `ஸ்ரீரங்கராஜ தீசஷதர்' என்று பௌண்டரீகயாகம் செய்ததால் ப்ரஸித்தரானார்.

ஸ்ரீகண்ணன், பெரியவச்சான் பிள்ளை, நாயனாராச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: